[31st January 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நெருக்கடியில் வேலை செய்வது தான் முக்கியம். உச்ச வரம்பு ஒன்றும் வேண்டியதில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அமைச்சர்கள் அதிகமாகப் பிரயாணம் செய்து மக்களுடைய குறைகளைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பது தான் என்னுடைய கருத்து. அதனால் பிரயாணம் செய்வதற்கு அதிகமாக ஆகக்கூடிய செலவை ஆட்சேபிக்கவில்லை. ஆனால், சொந்த வேலையாக அல்லது காங்கிரஸ் வேலையாக போகும்பொழுது இன்னொரு வேலையையும் போட்டுக் கொள்ளாமல் இருப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் எவ்வாறு நினைத்தபோதிலும், அவ்வாறு அமைச்சர்கள் செய்வதில்லை.

தஞ்சை மாவட்டத்தில் ஊற்றுக் கிணறுகள்

* 20 கேள்வி.—**திரு. செ. மாதவன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் ஊற்றுக் கிணறுகள் மூலம் பாசன வசதி செய்யும் திட்டம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) A special scheme for sinking two thousand (2,000) filter point tube wells is being implemented in Thanjavur district. Thanjavur district does not lie in the artesian belt.

திரு. செ. மாதவன் : அமைச்சர் அவர்கள் சொன்ன திட்டத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்குவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ? இது தஞ்சை மாவட்டத்தோடு நிற்குமா ? அல்லது மற்ற மாநிலங்களையும் சேர்த்துச் செய்வதற்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : The total cost of the scheme is Rs. 39.40 lakhs.

கனம் சபாநாயகர் : அடுத்த ஜில்லாக்களுக்கு விஸ்தரிக்கப்படுமா என்று கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள்.

கனம் திரு. பூ. கக்கன் : தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்து மட்டும் தான் 2,000 கிணறுகள் வெட்டுவது என்று உத்தேசம்.

திரு. செ. மாதவன் : ஊற்றுக் கிணறுகள் தோண்டும் வேலையை சர்க்கார் பொதுத் துறையில் எடுத்து நடத்துமா ? அல்லது தனிப்பட்டவர்களுக்கு மான்யம் வழங்குவதற்கு உத்தேசமா ? பொதுத் துறையில் எடுத்து நடத்தினால் ஊற்றுக் கிணறுகள் தோண்டும் முறையை எப்படிப் பின்பற்றப் போகிறது ? ஏற்கனவே இந்த மன்றத்தில் பதில் சொல்லும் பொழுது தண்ணீர் ஓடுவதைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு நம்முடைய மாநிலத்தில் வசதி இல்லை என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். வரவழைக்கப்போகிறோம் என்று உணவு அமைச்சர் சொல்லுகிறார்கள். இப்பொழுது இந்தத் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ? அதுவும் இதோடு சேர்க்கப்படுமா ?

31st January 1966]

கனம் திரு. பூ. கக்கன் : எங்கு தண்ணீர் ஊற்று இருக்கிறதோ அங்கெல்லாம் கிணறுகள் வெட்டிக் கொடுக்க வேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் திட்டம். இருந்தாலும், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் காலாகாலத்தில் நாற்றுப் பாவி, உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று நினைத்து, அங்கே இப்பொழுது கிணறுகள் வெட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கோ. சி. மணி : இந்த கிணறுகள் இந்த பசலிக்குள் வெட்டப்பட்டுவிடவேண்டும் என்று தான் இந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அல்லது ஒதுக்கப்பட்ட தொகையைக் கொண்டு எப்பொழுது வேண்டுமானாலும் வெட்டலாமா? வெட்டப்பட்ட கிணறுகளில் தண்ணீர் இல்லை என்று பாதியில் நிறுத்தப்பட்ட கிணறுகள் இருக்கின்றனவா?

கனம் திரு. பூ. கக்கன் : மொத்தம் 2,000 கிணறுகள் வெட்டுவதற்காக இந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது.

The number of filter points sunk up to 31st December 1965: successful 936, unsuccessful 758.

எந்த இடத்தில் தண்ணீர் வருகிறதோ அங்குதான் கிணறு வெட்டப்படும். தண்ணீர் வருகிறதா, இல்லையா என்று பரீட்சார்த்தமாகப் பார்க்காமல் இருக்க முடியாது. அப்படி பரீட்சார்த்தமாக வெட்டிப் பார்த்து தண்ணீர் இருப்பதைக் கண்டறிந்து தான் அரசாங்கம் கிணறு வெட்ட ஏற்பாடு செய்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : இம்மாதிரி கிணறுகள் வெட்டுவதில் சில கிணறுகளில் தண்ணீர் உப்புத் தண்ணீராகப் போய்விடுகிறது. உப்புத் தண்ணீரை விவசாயத்திற்கு சரியாகப் பயன்படுத்த முடியாது. ஆகவே, வேறு இடத்தில் கிணறு வெட்டுவதற்கு இந்தத் தொகையைக் கொடுப்பதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் திரு. பூ. கக்கன் : எந்த இடத்தில் தண்ணீர் கிடைக்கும் என்று பார்த்துத் தான் விவசாயிகள் கிணறுகள் வெட்டுகிறார்கள். வெட்டுகிற கிணறுகள் எல்லாவற்றிலும் உப்புத் தண்ணீராகப் போய்விடாது. பெரும் பகுதி விவசாயிகள் தங்களுக்குச் சாதகமாக நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்கிறார்கள். இப்பொழுது நான் சொன்னபடி தஞ்சை ஜில்லாவில் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று பரீட்சார்த்தமாக கிணறுகள் வெட்டுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திரு. சா. கணேசன் : அப்படி வெட்டப்படுகிற கிணறுகளில் சில அல்லது ஒன்றிரண்டு உப்புத் தண்ணீராகப் போய்விடுவதாகச் சொல்லப் படுகிறது. அந்தப் பிரதேசங்களில் புகையிலை சாகுபடி செய்து மிக அதிகமான, நல்ல வருமானத்தைப் பெறலாம். அதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறதா? உப்புத் தண்ணீர் இருக்கிறது என்கிற தகவல் அரசாங்கத்திற்குக் கிடைத்

திருக்கிறதா ? அதன் பேரில் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா அல்லது எடுக்க உத்தேசம் உண்டா என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை. விவசாயிகளே அப்படிப்பட்ட இடங்களில் புகையிலை சாகுபடியில் ஈடுபடலாம்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நீர் ஓட்டத்தைக் கண்டுபிடிக்க என்ன ஏற்பாடு செய்யப் படுகிறது ? அதைச் சர்க்காரே ஏற்று நடத்துமா ?

கனம் திரு. பூ. கக்கன் : நீர் ஓட்டத்தைப் பற்றிப் பிரச்சினை இல்லை. அதுபற்றித் தனிக் கேள்வி போட்டால், அதைப் பற்றிச் சொல்லலாம். இப்பொழுது 'ட்யூப் வெல்ஸ்' போட்டு தண்ணீர் எடுத்து, விவசாயம் செய்ய உதவிசெய்ய இதெல்லாம் செய்யப் படுகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், ஜில்லா முழுவதும் உப்புத் தண்ணீராக இருக்கிறது என்று சொல்லவில்லை. திருத்துறைப் பூண்டி, மன்னார்குடி போன்ற இடங்களில், ஒரு சில பிராந்தியங்களில் அப்படி இருந்து விவசாயிகள் நஷ்டப்படுகிறார்கள். அதற்கு மாற்றாக வேறு மானியம் கொடுத்து, வேறு இடத்தில் கிணறு வெட்ட வசதி செய்துகொடுக்க உத்தேசிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : 'வேறு மானியம்' என்றால் புரிந்து கொள்ள முடியவில்லை. இப்பொழுது கிணறுவெட்ட கடன் கொடுக்கிறோம். வேறு இடத்தில் கிணறு வெட்டினால் அதற்கும் கடன் வாங்கிக்கொள்ளலாம்.

கனம் சபாநாயகர் : அதல்ல அவர் கேள்வி. 'வெட்டிய கிணறு உப்புத் தண்ணீராகப் போனால், கொடுத்த கடனை வஜா செய்து விடுவார்களா ?' என்று கேட்கிறார். அதைத்தான் அப்படிச் சுற்றி வளைத்துக் கேட்கிறார்.

கனம் திரு. பூ. கக்கன் : அப்படிச் செய்வதற்கில்லை.

Cracker explosion in Perambalur bus-stand

*21 *Q*.—SRI V. SANKARAN : } Will the Hon. the Minister
SRI S. MANI : }
for Home be pleased to state—

(*a*) whether it is a fact that a cracker explosion occurred in the bus stand of Perambalur in Tiruchirappalli district recently; and

(*b*) if so, the reasons therefor and the extent of damages caused thereby ?